ICCM – 2019

# PROCEEDINGS

## 5th International Conference on Contemporary Management

## "Reshaping Human Capital towards Better Future"

Faculty of Management Studies and Commerce
University of Jaffna, Sri Lanka
July 29 - 30, 2019

# 5TH INTERNATIONAL CONFERENCE ON CONTEMPORARY MANAGEMENT (ICCM) – 2019

© Copy Right : 2019 Faculty of Management Studies and Commerce, University of Jaffna, Sri Lanka

Published by : Faculty of Management Studies and Commerce, University of Jaffna, Sri Lanka

URL : http://conf.jfn.ac.lk/iccm/

e-mail : iccm@univ.jfn.ac.lk

T.P : 0094(0)21 2223610

Printers : Harikanan Printers,
No. 672B, K. K. S. Road, Jaffna.

ISSN : 2448 – 9883

**Disclaimer:**
Responsibilities for content of the abstracts included in the publication remain with respective author(s).

# மஹாபாரத சகுந்தலோபாக்கியானமும் அபிக்ஞான சாகுந்தலமும் - ஓர் ஒப்பியல் ஆய்வு.

Srikala Jeganathan,
*University of Jaffna, Sri Lanka*

**ஆய்வுச் சுருக்கம்**

மஹாபாரதம்ஆதிபர்வத்தில் வரும் ஒரு பிரிவான சம்பவபர்வத்தில் வரும் சகுந்தலைலோபாக்கியானம் என்னும் கிளைக்கதையை ‘அபிக்ஞானசாகுந்தலம்” என்னும் அழகிய நாடகமாக்கித் தந்தவர் காளிதாசர். கவிஞனொருவனின் ஆக்கங்களில் அவனுக்கு முன்னர் வாழ்ந்த கவிகள் செலுத்தும் செல்வாக்குகணிசமானதாகும். கிளைவ்சன்சன் என்பாரிது பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்.” **A poet is by nature a piece of intellectual and emotional blotting paper. The most powerful of all influences is that of earlier poets. The poet has much of the poetry of the past in his ear. (Clive Sansen, 1947, p.3)** இக்கூற்றுக்கு காளிதாசர் தக்கதோர் எடுத்துக்காட்டாகும். மஹாபாரதத்தில் வரும் இக்கிளைக்கதையாகிய எலும்புக்கூட்டிற்குகச் காளிதாசர் தம் கற்பனைத்திறத்தால் சதை, இரத்த ஓட்டம், உயிர்ப்பு ஆகியவற்றை ஊட்டுவித்திருக்கின்றார். மஹாபாரதத்தில் இருந்து கதையை எடுத்தாண்டாலும், பாத்திரப் படைப்பிலும் கதைச்சம்பவங்களின் கோவை ஒழுங்கிலும், கதை கூறப்படும் பாங்கிலும் ஆசிரியர் தமது கற்பனையையே புகுத்தியுள்ளார். மூலக்கதையில் இடம்பெறாத சம்பவங்கள் பல நாடகதத்தில் இடம் பெற்று கதையைச் சிறப்பிக்கின்றன.

**திறவுச்சொற்கள் :** அபிக்ஞானசாகுந்தலம், கணையாழி, சாபம், கதாபாத்திரங்கள் கற்பனை